

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் திருப்பத்தூர் அ.மகாதேவனின் 11வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு கூட்டுறவுத்துறை அமைச்சரும் சிவகங்கை மாவட்டச் செயலாளருமான கே.ஆர்.பெரியகருப்பன் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். இதில் மகாதேவன் மகன் இளங்குமரன், மருமகள் சுதா, பேத்திமாலினி, சகோதரர் கே.வி.ராமகிருஸ்ணன், மைத்துனர்கள் கணேசன், சுந்தரம், பேரூர்க் கழகச் செயலாளர் ஆர்.கார்த்திகேயன், பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி. கோகிலராணி நாராயணன், துணைத்தலைவர் கான் முகமது உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள் .



விருதுநகர் அருகில் உள்ள கன்னிச்சேரியில் ஆரம்ப சுகாதார நிலையத்தை சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் திறந்து வைத்து நல உதவிகளை வழங்கினர். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் விருதுநகர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், ராஜபாளையம் தங்கப் பாண்டியன், சாத்தூர் ரெகுராமன், விருதுநகர் மருத்துவக் கல்லூரி முதல்வர் சீதாலட்சுமி ஆகியோர் இருந்தனர்.

### கோயம்புத்தூர் மாவட்டம் - வால்பாறை மற்றும் பொள்ளாச்சியில்- இருவேறு சம்பவங்களில்

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 31-

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை மற்றும் பொள்ளாச்சியில் ஏற்பட்ட இருவேறு சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ளதுடன் நிதியுதவி வழங்கிடவும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டம், சோலையார் அணை, இடதுகரை பகுதியில் மழுக்குப்பாறை செக்போஸ்ட்டிலிருந்து பன்னிமேடு செல்லும் பொதுப்பணித் துறைச் சாலையின் அருகில் உள்ள வீட்டின் அருகே நேற்று (30.7.2024) அதிகாலை சுமார் 4.00 மணியளவில் மண்சரிவு ஏற்பட்டதில் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த திருமதி.ராஜேஸ்வரி (எ) முத்து (வயது 57) க/பெ. ஆறுமுகம் மற்றும் செல்வி தனப்பிரியா (வயது 15) தா/பெ. சுகுணா ஆகிய இருவரும் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், திப்பம்பட்டி கிராமத்தில் தனியாருக்குச் சொந்தமான ஓட்டுவீட்டின் மேற்குப்பக்கச் சுவர் நேற்று (30.07.2024) இரவு பெய்த மழையினால் அதிகாலை சுமார் 3.00 மணியளவில் இடிந்து மேற்குப்பக்க ஓட்டு வீட்டின்மீது விழுந்ததில் வீட்டினுள் கட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த ஹரிஹரசுதன் (வயது 21) த/பெ. அன்பழகன் என்பவர் உயிரிழந்தார் என்ற செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

நேற்று அதிகாலை ஏற்பட்ட இந்த இருவேறு சம்பவங்களினால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### முதல்வர் உத்தரவுப்படி- மேட்டூர் அணையில் இருந்து

# தண்ணீர் திறப்பு! சாகுபடி செய்யவிருக்கும் விவசாயிகள் மகிழ்ச்சி!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜூலை 31-

முதல்வர் உத்தரவுப்படி - மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதனால் சாகுபடி செய்யவிருக்கும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர் என்று தினகரன் நாளேடு தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.



தினகரன்

ஜூலை 30, 2024 செவ்வாய்க்கிழமை

விவசாயிகள் மகிழ்ச்சி

தென்னிந்திய மாநிலங்களான தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசம் வழியாக பாயும் காவிரி ஆற்றின் நதிநீர் பங்கீடு நூறு ஆண்டுகளை கடந்தும் பிரச்னை தீரவில்லை. 1890ம் ஆண்டு மே 10ம் தேதி காவிரி பிரச்னை குறித்து மைசூர் சமஸ்தானம் சென்னை மாகாணத்துக்கும் இடையே முதல் பேச்சுவார்த்தை தொடங்கியது. பின்னர் 1892ல் காவிரி நீர் பகிர்வு உடன்படிக்கை செய்யப்பட்டது. 1924ம் ஆண்டு மீண்டும் பேச்சு நடத்தி 50 ஆண்டு காலத்துக்கு உடன்படிக்கை செய்யப்பட்டது.

பின்னர் 1970களில் அமைக்கப்பட்ட காவிரி உண்மை அறியும் குழு கண்டறிந்தபடி, தமிழ்நாட்டின் காவிரி நீர்ப்பாசன பரப்பு 25.80 லட்சம் ஏக்கர் என்றும், கர்நாடகத்தின் நீர்ப்பாசன பகுதி 6.80 லட்சம் ஏக்கர் என்றும் தெரியவந்தது. தொடர்ந்து பல்வேறு பிரச்னைகளுக்கு இடையே உச்ச நீதி மன்ற ஆணைப்படி 1990 ஜூன் 2ம் நாள் பிரதமர் வி.பி.சிங் தலைமையிலான இந்திய அரசு, காவிரி தீர்ப்பாயம் அமைத்தது.

இதுகுறித்து 30.07.2024 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

தென்னிந்திய மாநிலங்களான தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசம் வழியாக பாயும் காவிரி ஆற்றின் நதிநீர் பங்கீடு நூறு ஆண்டுகளை கடந்தும் பிரச்சினை தீரவில்லை. 1890ம் ஆண்டு மே 10ம் தேதி காவிரி பிரச்சினை குறித்து மைசூர் சமஸ்தானம் சென்னை மாகாணத்துக்கும் இடையே முதல் பேச்சுவார்த்தை தொடங்கியது. பின்னர் 1892ல் காவிரி நீர் பகிர்வு உடன்படிக்கை செய்யப்பட்டது. 1924ம் ஆண்டு மீண்டும் பேச்சு நடத்தி 50 ஆண்டு காலத்துக்கு உடன்படிக்கை செய்யப்பட்டது.

பின்னர் 1970களில் அமைக்கப்பட்ட காவிரி உண்மை அறியும் குழு கண்டறிந்தபடி, தமிழ்நாட்டின் காவிரி நீர்ப்பாசன பரப்பு 25.80 லட்சம் ஏக்கர் என்றும், கர்நாடகத்தின் நீர்ப்பாசன பகுதி 6.80 லட்சம் ஏக்கர் என்றும் தெரியவந்தது. தொடர்ந்து பல்வேறு பிரச்னைகளுக்கு இடையே உச்ச நீதிமன்ற ஆணைப்படி 1990 ஜூன் 2ம் நாள் பிரதமர் வி.பி.சிங் தலைமையிலான இந்திய அரசு, காவிரி தீர்ப்பாயம் அமைத்தது. தீர்ப்பாயத்திடம் கர்நாடகா 465 டி.எம்.சி., தமிழகம் 566 டி.எம்.சி., கேரளா 99.8 டி.எம்.சி., புதுவை 9.3 டிஎம்சி தண்ணீர் அளவு கேட்டது.

ஆனால் தீர்ப்பாயத்திடம் நியாயம் கிடைக்காததால் உச்ச நீதிமன்றத்துக்கு போனது தமிழக அரசு. 198090க்கும் இடைப்பட்ட 10 ஆண்டு சராசரியை கணக்கிட்டு தமிழ்நாட்டுக்கு 205 டிஎம்சி நீர் வழங்க வேண்டும் என கர்நாடகத்துக்கு உச்ச நீதிமன்றம் இடைக்கால தீர்ப்பு வழங்கியது. தொடர்ந்து உச்ச நீதிமன்றத்தின் இறுதி தீர்ப்பில் 192 டிஎம்சி ஆகக் குறைந்து போனது. டிஎம்சி அளவில் ஜூன்: 10, ஜூலை: 34, ஆகஸ்ட்: 50, செப்டம்பர்: 40, அக்டோபர்: 22, நவம்பர் :15, டிசம்பர்: 8, ஜனவரி: 3, பிப்ரவரி: 2.5, மார்ச்: 2.5, ஏப்ரல்: 2.5, மே: 2.5 என தண்ணீர் வழங்க அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஒரு மாதத்தில் தண்ணீர் குறைவாக கொடுத்தால், அடுத்தடுத்த மாதங்களில் அந்த நிலுவையை கொடுத்து கணக்கை நேர் செய்ய வேண்டும் எனவும் கூறியது. கர்நாடக பகுதியில் அதிகமாக மழை பெய்தால் மட்டுமே அம்மாநில அரசு காவிரியில் தண்ணீர் திறந்து விடுகிறது. டெல்லியில் இம்மாத துவக்கத்தில் கூடிய காவிரி ஒழுங்காற்று குழு கூட்டத்தில், கர்நாடக அரசு தமிழகத்துக்கு தினமும் 1 டிஎம்சி காவிரி நீரை ஜூலை 31ம் தேதி வரை திறந்துவிட வேண்டும். பிலிகுண்டுலு சோதனை நிலையத்தில் தினமும் வினாடிக்கு 11 ஆயிரத்து 500 கனஅடி நீர் செல்வதை உறுதி செய்ய வேண்டும் என பரிந்துரை செய்தது. இதனையும் கர்நாடக அரசு மறுத்து வந்த நிலையில் வருண பகவான் கருணையால் கர்நாடகா மற்றும் காவிரி படுகையில் கனமழை பெய்து வருகிறது.

இதனால் கிருஷ்ண ராஜ சாகர், கபினி ஆகிய 2 அணைகளும் முழு கொள்ளளவை எட்டின. அணைக்கு வரும் உபரிநீர் காவிரியில் திறக்கப்படுகிறது. நேற்று காலை நிலவரப்படி அணைக்கான நீர்வரத்து 1.52 லட்சம் கன அடியில் இருந்து 1.55 லட்சம் கனஅடியாக அதிகரித்துள்ளது. மேட்டூர் அணை நீர்மட்டம் முழு கொள்ளளவை எட்ட உள்ளது. தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படுகிறது. ஆழ்குழாய் கிணறு மூலம் குறுவை சாகுபடி செய்துள்ள விவசாயிகளும் 15 லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி செய்ய இருக்கும் விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் பயனடையும் மக்களுக்கு, இனிமேல் குடிநீர் தட்டுப்பாடு இருக்காது. மேலும் ஏரி, குளங்கள் நிரம்பும். இதனால் நிலத்தடி நீர்மட்டம் உயரும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மதுரை மாவட்டம் - திருமங்கலம் அருகே கப்பலூர் சுங்கச்சாவடியை

# கட்டணமின்றி உள்ளூர் மக்கள் பயன்படுத்த பேச்சுவார்த்தை!

## அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு!

மதுரை, ஜூலை 31-

மதுரை மாவட்டம், திருமங்கலம் சுங்கச்சாவடி கட்டணமின்றி உள்ளூர் மக்கள் பயன்படுத்துவதற்கு பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டது. 2020 வரை என்ன நடைமுறை இருந்ததோ அதே தொடரும் என அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டது.

மதுரை மாவட்டம் - திருமங்கலம் கப்பலூர் சுங்கச்சாவடியில் திருமங்கலம் பகுதியைச் சேர்ந்த உள்ளூர் மக்கள் கட்டணம் இன்றி கடப்பதற்கான ஆய்வுக் கூட்டம் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் திருமங்கலம் பகுதி மக்கள் வணிகர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன், சுங்கச்சாவடி அதிகாரிகள் என பலர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் சுமூகத் தீர்வு எட்டப்பட்டது. இதில் கடந்த 2020-ஆம் ஆண்டு வரை என்ன நடைமுறை இருந்ததோ அதை தொடர கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அதன்படி உள்ளூர் மக்கள் வணிகர்கள் கட்டணமின்றி சுங்கச்சாவடி கடப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் அப்பகுதியினர் ஆதார் அட்டையைக் காண்பித்து கட்டணமின்றி சுங்கச்சாவடியைக் கடப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளதாக வணிகவரி மற்றும் பத்திரப் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

# திருவாரூரில் புதிய கட்டிடம் திறப்பு!

திருவாரூர், ஜூலை 31–

தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் தளபதி அவர்கள் காணொளி காட்சி வாயிலாக, திருவாரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.3.23 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள புதிய அலுவலக கட்டிடத்தினை திறந்து வைத்தார்.

திருவாரூர் சட்டமன்றத் தொகுதி கொரடாச்சேரி மக்களின் கோரிக்கையை ஏற்று சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் தளபதி அவர்களிடம் வைத்த வேண்டுகோளை ஏற்று, தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்கள் ஆணைப்படி கொரடாச்சேரியில் புதிதாக கட்டப்பட்ட கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றிய புதிய அலுவலக கட்டிடத்தினை தமிழ்நாடு முதல்வர் தளபதி காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

ரூ.3.23 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட கட்டிட திறப்புவிழாவையடுத்து, சட்டமன்ற உறுப்பினர் பூண்டி. கே.கலைவாணன் அலுவலகத்தில் குத்துவிளக்கேற்றினார். மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ, மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள், ஒன்றியக்குழு தலைவர் உமாப்ரியா, துணைத்தலைவர் ஆர்.பாலச்சந்திரன் மற்றும் அரசு அதிகாரிகளும் குத்துவிளக்கேற்றினர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட துணை செயலாளர் எம்.எஸ்.கார்த்திக், பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், ஒன்றியக்குழுத்தலைவர்கள் சோம. செந்தமிழ்ச்செல்வன், மணிமேகலை, ஒன்றிய செயலாளர்கள் வீ.அன்பரசன், கோ.தெட்சிணாமூர்த்தி, பால.ஞானவேல், இரா.மனோகரன், ஐ.வி.குமரேசன், நகர செயலாளர்கள் வாரை.எஸ். பிரகாஷ், எஸ்.வி.பக்கிரிசாமி, பூண்டி. கே.கலைவேந்தன், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் பணகுடி. ஏ.எஸ்.குமார், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். தங்கள் இல்ல விழா போல நடைபெற்ற இந்த விழாவில் கொரடாச்சேரியில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் இருந்து பொதுமக்கள் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வே. தங்கபாண்டியன்

### ஜூலை 31 (1997)



தென்பாண்டி மண்டலத்தில் கழகத்தை வளர்த்த முக்கிய தளகர்த்தர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர்.

மாவட்டக் கழகச் செயலாளராக தொடர்ந்து 23 ஆண்டுகள் பணியாற்றியவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். நெருக்கடி நிலையின்போது ஓராண்டு மிசா கைதியாக சிறைவாசம் அனுபவித்தவர்.

இருமுறை சட்டமன்ற உறுப்பினராகவும், இருமுறை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், கலைஞர் அமைச்சரவையில் 1996ஆம் ஆண்டு கூட்டுறவு – வணிகவரித்துறை அமைச்சராகவும் பணியாற்றியவர்.

காரியாப்பட்டி ஒன்றியப் பெருந்தலைவர், மல்லாங்கிணறு பேரூராட்சித் தலைவர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

“மாவட்டச் செயலாளர் பணியில் வீரமிகு பாண்டியனாகவும், அமைச்சர் பொறுப்பில் பத்தரை மாற்றுத் தங்கமாகவும் திகழ்ந்தவர்” என தலைவர் கலைஞர் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தலைமைக் கழகம்

தி.மு.க.



